**தின கனி** காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-2272060 9443699066

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




மலர்:03 | இதழ்:283 | 4 பக்கங்கள் | 10:05:2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தாரூ,1825



களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்.

**விளக்கம்:**

களவு செய்து பொருள் கொள்வதால் உண்டாகிய ஆக்கம் பெருகுவது போல் தோன்றி இயல்பாக இருக்க வேண்டிய அளவையும் கடந்து கெட்டு விடும்.

# ஆளுநரை 3-வது முறையாக சந்தித்தார் விஜய் - பெரும்பான்மைக்கான ஆதரவு இல்லாததால் தவெக ஆட்சி அமைப்பதில் சிக்கல் நீடிப்பு

சென்னை: மே,10

இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவுக் கடிதங்களை ஆளுநர் அர்லேகரிடம் தவெக தலைவர் விஜய் வழங்கினார். எனினும், பெரும்பான்மை ஆதரவு கிடைக்காததால் தவெக ஆட்சி அமைப்பதில் சிக்கல் நீடிக்கிறது.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றிய தவெக, தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. எனினும், ஆட்சி அமைக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், முதலில் 5 எம்எல்ஏக்கள் கொண்ட காங்கிரஸ் கட்சி, திமுக கூட்டணியில் இருந்து விலகி தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தது.2 தொகுதிகளில் போட்டியிட்டுள்ள விஜய், ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டிய நிலையில், காங்கிரஸ் ஆதரவு மூலம் தவெக பலம் 112 ஆக உயர்ந்தது. இதையடுத்து, ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநர் அர்லேகரை சந்தித்து, விஜய் கடிதம் வழங்கினார். ஆனால், ‘ஆட்சி அமைக்கத் தேவையான 118 உறுப்பினர்களின் பட்டியலை சமர்ப்பித்தால் மட்டுமே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்’’ என்று ஆளுநர் உறுதிபடத் தெரிவித்தார். பெரும்பான்மைக்கு 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், திமுக கூட்டணியில் அங்கம்



வகிக்கும் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் தலைவர்களை தவெக நிர்வாகிகள் சந்தித்து ஆதரவு கோரினர். இந்நிலையில், தவெகவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக தீவிரமாக ஆலோசித்து வந்த இடதுசாரி கட்சிகள், இறுதியில்தவெகவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக நேற்று அறிவித்தன.இதற்கான அதிகாரப்பூர்வ ஆதரவுக் கடிதத்தை சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சிடிஆர். நிர்மல்குமாரிடம் அக்கட்சித் தலைவர்கள் வழங்கினர். இதன்மூலம் தவெக பலம் 116 ஆக உயர்ந்தது. இதற்கிடையே ஐயூஎம்எல் கட்சியும் தவெகவுக்கு ஆதரவு அளித்துள்ளதாக தகவல் வெளியான நிலையில் அக்கட்சி இதற்கு மறுப்பு தெரிவித்தது. இதற்கிடையே, விசிக தலைவர் திருமாவளவனுடனும் தவெகவினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதைத் தொடர்ந்து, இடதுசாரி தலைவர்கள் மற்றும் திமுக தலைவர் ஸ்டாலினுடன் திருமாவளவன் ஆலோசனை நடத்தியதாகவும் தகவல் வெளியானது. இந்நிலையில், தவெகவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பான தனது முடிவை இன்று காலை தெரிவிப்பதாக திருமாவளவன் கூறியுள்ளார். இதற்கிடையே, நேற்று மாலை 7 மணி அளவில் ஆளுநர் மாளிகை சென்ற விஜய், ஆளுநர் அர்லேகரை 3-வது முறையாக சந்தித்து, எம்எல்ஏக்களின் ஆதரவுக் கடிதங்களை வழங்கினார். கட்சியின் பொதுச் செயலாளர் என். ஆனந்த், செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா, அருண்ராஜ் மற்றும் பொருளாளர் வெங்கட்ரமணன் ஆகியோர் உடன் இருந்தனர். இதன்பின்னர், தியாகராய நகரில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் அலுவலகங்களுக்கு சென்ற விஜய், அங்கு அக்கட்சிகளின் தலைவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். தவெகவுக்கு பெரும்பான்மைக்கான 118 இடங்கள் கிடைக்காத நிலையில், ஆட்சி அமைப்பது தொடர்பாக ஆளுநரிடம் இருந்து அழைப்பு விடுக்கப்படவில்லை. திருமாவளவன் தனது முடிவை இன்று காலை அறிவிக்க உள்ளார். அதன் பிறகு, தவெகவுக்கு பெரும்பான்மைக்கான 118 எம்எல்ஏக்களின் ஆதரவு உறுதி செய்யப்பட்ட பிறகே, ஆளுநரிடம் இருந்து அழைப்பு வரும் என்று தெரிகிறது.காங்கிரஸ் எம்எல்ஏக்கள் ஹைதராபாத்தில் தங்கவைப்பு? - காங்கிரஸ் எம்எல்ஏக்களில் 4 பேர் ஹைதராபாத்தில் உள்ள ஓட்டலில் பத்திரமாக தங்க வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது. இன்னொரு எம்எல்ஏவான பிரவீன், இவர்களுடன் செல்லவில்லை. இவர் பெங்களூரு சென்றுவிட்டதாக கூறப்படுகிறது.

# மேற்கு வங்கத்தின் முதல் பாஜக முதல்வராக சுவேந்து அதிகாரி பதவியேற்றார்



கொல்கத்தா: மே,10

மேற்கு வங்கத்தின் முதல் பாஜக முதல்வராக சுவேந்து அதிகாரி பதவியேற்றார். கொல்கத்தாவின் பிரிகேட் பரேடு மைதானத்தில் நடைபெற்ற இந்த விழாவில் ஆளுநர் ஆர்.என். ரவி அவருக்குப் பதவிப் பிரமாணமும் ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். இந்த நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி நேரில் கலந்துகொண்டு சுவேந்து அதிகாரிக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். அவருடன் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாஜக தேசியத் தலைவர் நிதின் நபீன் மற்றும் பல்வேறு மத்திய அமைச்சர்கள் பங்கேற்றனர்.ஆந்திர பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு, உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வ சர்னா உள்ளிட்ட என்டிஏ ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்களும் இந்த விழாவில் கலந்துகொண்டனர். பதவியேற்பு விழாவுக்கு முன்னதாக, பிரதமர் மோடி மேடையில் இருந்த 98 வயதான மூத்த பாஜக தொண்டர் மகான்லால் சர்க்காரிடம் ஆசி பெற்றார்.சமீபத்தில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில், பாஜக 207 இடங்களைக் கைப்பற்றி 15 ஆண்டுகால திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. சுவேந்து அதிகாரி நந்திகிராம் மற்றும் பவானிப்பூர் ஆகிய இரு தொகுதிகளிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பவானிப்பூர் தொகுதியில் முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜியை 15,115 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் தோற்கடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.ஒரு காலத்தில் மேற்குவங்க சட்டப்பேரவையில் பாஜக-வுக்கு 3 எம்எல்ஏக்கள் மட்டுமே இருந்தனர். இந்த எண்ணிக்கை கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் 77 எம்எல்ஏக்களாக உயர்ந்தது. தற்போதைய சட்டப்பேரவைத் தேர்தலில் 207 பாஜக எம்எல்ஏக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். 9 மாவட்டங்களில் திரிணமூல் காங்கிரஸுக்கு ஒரு தொகுதிகூட கிடைக்கவில்லை.

# முப்படைகளின் புதிய தலைமை தளபதியாக என்.எஸ்.ராஜா சுப்ரமணி நியமனம்



புதுடெல்லி: மே,10

முப்படைகளின் புதிய தலைமை தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் (ஓய்வு) என்.எஸ். ராஜா சுப்ரமணி நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகத்தில் ராணுவ ஆலோசகராகப் பணியாற்றி வரும் ராஜா சுப்ரமணி, வரும் மே 30-ம் தேதி புதிய தலைமை தளபதியாக பொறுப்பேற்பார். தற்போதைய தலைமை தளபதி அனில் சவுகான் ஓய்வு பெறும் நிலையில் ராஜா சுப்ரமணி அந்த பதவியில் அமர உள்ளார்.இந்திய ராணுவத்தின் துணை தளபதியாக பணியாற்றி ஓய்வு பெற்ற இவருக்கு, இந்தியாவின் மேற்கு மற்றும் வடக்கு எல்லைகளில் நிலவும் பாதுகாப்புச் சூழல்கள் குறித்து ஆழமான புரிதலும் அனுபவமும் உண்டு. ஏறக்குறைய 39 ஆண்டுகள் ராணுவத்தில் பணியாற்றிய இவர், லக்னோவில் உள்ள மத்திய ராணுவ கட்டளையின் தளபதியாகவும் பணியாற்றியுள்ளார். இந்திய கடற்படையின் புதிய தளபதியாக வைஸ் அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன், வரும் மே 31-ஆம் தேதி பொறுப்பேற்பார். தற்போதைய தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதிக்கு பிறகு இவர் பொறுப்பேற்கவுள்ளார். 1987-ஆம் ஆண்டு கடற்படையில் இணைந்த இவர், தகவல் தொடர்பு மற்றும் மின்னணுப் போர் முறைகளில் நிபுணத்துவம் பெற்றவர். ஐஎன்எஸ் விக்ரமாதித்யா விமானம் தாங்கி கப்பல், ஐஎன்எஸ் மைசூர் உள்ளிட்ட போர்க்கப்பல்களுக்குத் தலைமை தாங்கிய அனுபவம் இவருக்கு உண்டு. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இரு அதிகாரிகளுமே தேசிய பாதுகாப்பு அகாடமியின் முன்னாள் மாணவர்கள் ஆவர். லெப்டினன்ட் ஜெனரல் ராஜா சுப்ரமணி லண்டனின் கிங்ஸ் கல்லூரியில் முதுகலைப் பட்டமும், சென்னை பல்கலைக்கழகத்தில் எம்.பில் பட்டமும் பெற்றுள்ளார். அதேபோல், வைஸ் அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் உள்ள உயரிய ராணுவக் கல்லூரிகளில் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியப் பாதுகாப்புத் துறையில் பல்வேறு மாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், இந்த இரு அதிகாரிகளின் நியமனம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

# விஜய் ஆட்சி அமைக்க விசிக ஆதரவு: பெரும்பான்மையை எட்டியது தவெக!





சென்னை: மே,10

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக 108 இடங்களைக் கைப்பற்றினாலும் கூட, பெரும்பான்மை இல்லாததால் இதுவரை ஆட்சியமைக்க இயலாமல் தவித்த நிலையில், மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் தவெகவுக்கு விசிக ஆதரவு தெரிவித்துள்ளது. இதன்மூலம் அக்கட்சி பெரும்பான்மையை எட்டியது.இது தொடர்பாக தவெக எம்எல்ஏ ஆதவ் அர்ஜுனா கூறும்போது, “அனைத்து தோழர்களுக்கும் எங்களுடைய நன்றி. ஜனநாயகம் காக்கப்படும். தமிழக மக்களுடைய ஆதரவுடன் தமிழக முதல்வராக எங்கள் தலைவர் உருவாவார்” எனத் தெரிவித்தார். ஆனால், மிகவும் எதிர்பார்க்கப்பட்ட திருமாவளவன் செய்தியாளர்கள் சந்திப்பு இன்னமும் நடைபெறவில்லை. தவெகவுக்கு ஆதரவு தெரிவித்து விசிக தலைவர் தொல்.திருமாவளவன் வழங்கியுள்ள கடிதத்தில், “தமிழக மக்களுக்கு நிலையான, ஜனநாயக முறையிலான ஆட்சி கிடைக்கப்பெற வேண்டும் என்பதற்காக, தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் விசிக தனது 2 எம்எல்ஏ.,க்களின் ஆதரவையும் தவெகவுக்கு எந்த நிபந்தனையும் இன்றி வழங்குகிறது” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.ஐயூஎம்எல் ஆதரவு அறிவிப்பு:விசிகவும் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியதைத் தொடர்ந்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியும் ஆதரவைக் கொடுத்துள்ளது. ஆக, மொத்தம் 120 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுள்ளது தவெக. அடுத்தக் கட்டமாக ஆட்சி அமைப்பதற்கான நகர்வுகளை எதிர்கொண்டுள்ளது. முன்னதாக, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றிய தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. எனினும், ஆட்சி அமைக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், முதலில் 5 எம்எல்ஏக்கள் கொண்ட காங்கிரஸ் கட்சி, திமுக கூட்டணியில் இருந்து விலகி தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தது. 2 தொகுதிகளில் போட்டியிட்டுள்ள விஜய், ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டிய நிலையில், காங்கிரஸ் ஆதரவு மூலம் தவெக பலம் 112 ஆக உயர்ந்தது. இதையடுத்து, ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநர் அர்லேகரை சந்தித்து விஜய் கடிதம் வழங்கினார். ஆனால், ‘ஆட்சி அமைக்கத் தேவையான 118 உறுப்பினர்களின் பட்டியலை சமர்ப்பித்தால் மட்டுமே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்’ என்று ஆளுநர் உறுதிபடத் தெரிவித்தார். பெரும்பான்மைக்கு 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் தலைவர்களை தவெக நிர்வாகிகள் சந்தித்து ஆதரவு கோரினர்.இதன் தொடர்ச்சியாக, தவெகவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக தீவிரமாக ஆலோசித்து வந்த இடதுசாரி கட்சிகள், இறுதியில்தவெகவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக வெள்ளிக்கிழமை அறிவித்தன. இதற்கான அதிகாரப்பூர்வ ஆதரவுக் கடிதத்தை சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சிடிஆர். நிர்மல்குமாரிடம் அக்கட்சித் தலைவர்கள் வழங்கினர். இதன்மூலம் தவெக பலம் 116 ஆக உயர்ந்தது. அதேவேளையில், விசிக தலைவர் திருமாவளவனுடனும் தவெகவினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதைத் தொடர்ந்து, இடதுசாரி தலைவர்கள் மற்றும் திமுக தலைவர் ஸ்டாலினுடன் திருமாவளவன் ஆலோசனை நடத்தியதாகவும் தகவல் வெளியானது. இதனிடையே, வெள்ளிக்கிழமை மாலை 7 மணி அளவில் ஆளுநர் மாளிகை சென்ற விஜய், ஆளுநர் அர்லேகரை 3-வது முறையாக சந்தித்து, எம்எல்ஏக்களின் ஆதரவுக் கடிதங்களை வழங்கினார். அதன்பின்னர், தியாகராய நகரில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் அலுவலகங்களுக்கு சென்ற விஜய், அங்கு அக்கட்சிகளின் தலைவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். தவெகவுக்கு பெரும்பான்மைக்கான 118 இடங்கள் கிடைக்காத நிலையில், ஆட்சி அமைப்பது தொடர்பாக ஆளுநரிடம் இருந்து வெள்ளிக்கிழமை அழைப்பு விடுக்கப்படவில்லை. இந்தப் பின்னணியில்தான் விசிகவும் ஆதரவு அளித்துள்ளது. அதன்பின் ஐயூஎம்எல் ஆதரவின் மூலம் தவெக பலம் இப்போது 120 ஆக உயர்ந்துள்ளது.

# “கேரள முதல்வர் குறித்து காங். தலைமை 24 மணி நேரத்துக்குள் முடிவெடுக்கும்” - கே.முரளிதரன்

திருவனந்தபுரம்: மே,10

கேரளாவின் அடுத்த முதல்வர் யார் என்பது குறித்த ஆலோசனைகள் 24 மணி நேரத்துக்குள் நிறைவடையும் என்ற தகவல் டெல்லியில் இருந்து வந்துள்ளதாக மூத்த காங்கிரஸ் தலைவர் கே.முரளிதரன் தெரிவித்துள்ளார்.நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 140 தொகுதிகளில், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (யுடிஎஃப்) 102 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் தகுதியைப் பெற்றுள்ளது. இதில், காங்கிரஸ் மட்டுமே 63 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதையடுத்து, கேரளாவின் அடுத்த முதல்வரை தேர்வு செய்வதற்கான முயற்சிகளை காங்கிரஸ் கட்சி தீவிரப்படுத்தி உள்ளது.காங்கிரஸ் கட்சியின் மேலிட பார்வையாளர்களான அஜய் மக்கான் மற்றும் முகுல் வாஸ்னிக் ஆகியோர் கடந்த 7-ம் தேதி திருவனந்தபுரத்தில் காங்கிரஸ் எம்எல்ஏக்களின் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினர். இதில், யாரை முதல்வராக தேர்ந்தெடுப்பது என்பது குறித்து எம்எல்ஏக்களின் கருத்துகளை அவர்கள் கேட்டறிந்தனர்.இது தொடர்பாக டெல்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அஜய் மக்கான், “காங்கிரஸ் எம்எல்ஏக்களின் கூட்டத்தை நாங்கள் மே 7-ம் தேதி கூட்டினோம். ஒவ்வொரு எம்எல்ஏவிடமும் நாங்கள் தனித்தனியாகப் பேசினோம். கட்சியின் சட்டப்பேரவைக் குழு தலைவர் தொடர்பான அவர்களின் கருத்துக்களைக் கேட்டோம். அவர்கள் கூறிய மற்ற கருத்துகளையும் நாங்கள் குறித்துக்கொண்டோம்.இதையடுத்து, காங்கிரஸ் சட்டப்பேரவைத் தலைவரை தேர்வு செய்வதற்கான முழு அதிகாரத்தையும் காங்கிரஸ் தலைமைக்கு அளிக்கும் ஒருவரி தீர்மானத்தை அனைத்து எம்எல்ஏக்களும் ஒன்றிணைந்து ஒருமனதாக நிறைவேற்றினர்.

# சென்னை | பாஸ்போர்ட் அலுவலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்




சென்னை: மே,10

பாஸ்போர்ட் அலுவலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது குறித்து போலீஸார் விசாரிக்கின்றனர். வடபழனி ஆற்காடு சாலை பானுமதி தெருவில் மண்டல பாஸ்போர்ட் அலுவலகம் உள்ளது. இந்த அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு, மின்னஞ்சல் நேற்று முன்தினம் இரவு வந்தது.அதில் அந்த அலுவலகத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகவும், அது சிறிது நேரத்தில் வெடிக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.இதையடுத்து, அலுவலக ஊழியர்கள் அளித்த தகவலின் பேரில் கே.கே.நகர் போலீஸாரும், வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீவிர சோதனை நடத்தினர். ஆனால் அங்கு எந்த வெடிபொருளும் கண்டெடுக்கப்படவில்லை.இதனால் வதந்தியை பரப்பும் நோக்கத்துடன் அந்த மின்னஞ்சல் வந்திருப்பது தெரியவந்தது. இது தொடர்பாக கே.கே. நகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை நடத்துகின்றனர்.

# அதிமுக ஆட்சி அமைக்க ஆதரவு என்ற திமுக யோசனையை ஏற்க மறுத்து விட்டோம்: எம்.ஏ.பேபி தகவல்



சென்னை: மே,10

அதிமுக தலைமையில் ஆட்சி அமைக்க ஆதரவு அளிக்குமாறு திமுக கேட்டது. ஆனால், அதற்கு நாங்கள் மறுத்துவிட்டோம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது: தமிழகத்தில் திமுக கூட்டணியில் இருந்த காங்கிரஸ் கட்சி, அவர்களை கலந்தாலோசிக்காமலேயே வெளியேறியது.ஆனால், எங்களை பொறுத்தவரை திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடன் கலந்தாலோசித்தோம். எங்களது மாநில தலைவர்கள், அவரை சந்தித்து பேசியபோது, திமுக ஆதரவுடன் ஒரு அரசை அமைப்பது குறித்த யோசனை முன்வைக்கப்பட்டது. அதாவது, அதிமுக தலைமையிலான அரசை திமுக வெளியில் இருந்து ஆதரிக்க இருப்பதாக தெரிவித்தனர். மற்ற விவரங்கள் எதையும் எங்களிடம் கூறவில்லை. ஆனால், திமுக என்ன செய்ய விரும்புகிறது என்பதை எங்களிடம் நியாயமான முறையில் கலந்தாலோசித்தனர்.அதை நாங்களும் ஆதரிக்க வேண்டும், அவர்களது அணுகுமுறையை நாங்களும் பின்பற்ற வேண்டும் என்று திமுக விரும்பியது. நாங்கள் திமுகவை எதிர்க்கப் போவதில்லை.ஆனால், பாஜக கூட்டணியில் ஒரு அங்கமாக இருந்த அதிமுகவை ஆதரிக்கும் அரசியல் முடிவை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. தேர்தலில் அதிமுக தோல்வியடைந்து விட்டது.திமுகவும் தோல்வியடைந்துவிட்டது. நாங்கள் திமுக கூட்டணியில் ஒரு அங்கமாக இருந்தோம். அதனால் நாங்களும் தோற்றுவிட்டோம். அந்தவகையில், நாங்கள் ஆட்சி அமைக்க முடியாது. எனவே, தமிழக சட்டப்பேரவையில் தனிப்பெரும் கட்சியாக உருவாகிய தவெகவுக்கு எங்கள் ஆதரவை வழங்கியிருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## புதுச்சேரியில் ஆட்சி அமைக்க அனுமதி கோரி ஆளுநரிடம் கடிதம்: 13-ம் தேதி முதல்வராக ரங்கசாமி பதவியேற்கிறார்



புதுச்சேரி: மே,10

புதுச்சேரியில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராக ரங்கசாமி தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநரிடம் கடிதம் அளித்தார். வரும் 13-ம் தேதி முதல்வராக அவர் பதவியேற்கிறார்.புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 18 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள என்ஆர். காங்கிரஸ் 12, பாஜக 4, அதிமுக, லஜக முறையே ஒரு இடத்தில் வெற்றி பெற்றுள்ளன.புதுச்சேரியில் உள்ள 30 எம்எல்ஏக்களில் ஆட்சி அமைக்க 16 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை. அதேநேரம் தற்போது தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 18 எம்எல்ஏக்கள் பலம் உள்ளதால் மீண்டும் ரங்கசாமி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைய உள்ளது.ஏற்கெனவே கடந்த 3 நாட்களுக்கு முன் என்ஆர்.காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை கட்சித்தலைவராக ரங்கசாமி தேர்வு செய்யப்பட்டார். அதே போல் பாஜகவின் சட்டப்பேரவைக் கட்சித் தலைவராக நமச்சிவாயம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.என்டிஏ கூட்டணி அமைச்சரவையில் பாஜவுக்கு எத்தனை அமைச்சர்கள் என்ற முதல்கட்ட பேச்சுவார்த்தை நடந்தது. இதில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. அதைத்தொடர்ந்து, புதிய ஆட்சி அமைய முதல்வர் பதவியை ரங்கசாமி தனது பதவியை ராஜினாமா செய்து, துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனிடம் நேற்று முன்தினம் கடிதம் அளித்தார். இதைத்தொடர்ந்து நேற்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், பாஜக மேலிடப் பொறுப்பாளர் மன்சுக் மாண்டவியா, ரங்கசாமி, பேரவையின் பாஜக தலைவர் நமச்சிவாயம், அதிமுக மாநிலச் செயலாளர் அன்பழகன், லட்சிய ஜனநாயக கட்சித் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் மற்றும் என்டிஏ கூட்டணி எம்எல்ஏக்கள் பங்கேற்றனர்.இதில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராக ரங்கசாமி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். ரங்கசாமி ஆட்சி அமைக்க பாஜக, அதிமுக, லஜக கட்சிகள் ஆதரவுக் கடிதங்களை வழங்கின. கூட்டத்துக்கு பின் ரங்கசாமி கூறும்போது, “ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநரை சந்திக்கவுள்ளேன். அதன்பிறகு பதவியேற்பு விழா தேதி பற்றி முடிவு செய்யப்படும். அமைச்சர்கள் பதவி யார் யாருக்கு, எந்தக் கட்சியினருக்கு என்பது பதவி தரும்போது தெரியும். பேரவைத் தலைவர் யார் என்பதையும் பிறகு தெரிவிக்கிறேன்” என்றார்.என்டிஏ எம்எல்ஏக்கள் தரப்பில் விசாரித்தபோது, “வரும் 13-ம் தேதி ஆளுநர் மாளிகையில் நடைபெறும் விழாவில் முதல்வர் ரங்கசாமி பதவியேற்க முடிவு எடுத்துள்ளார்” என்று தெரிவித்தனர். இதுதொடர்பான முறையான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று தெரிவித்திருந்தனர். பாஜக அழுத்தம்மேலும் கட்சி வட்டாரங்களில் விசாரித்தபோது, மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியாவும் ரங்கசாமியும் தனியாக பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது கடந்த முறையை போல பேரவைத் தலைவர், இரு அமைச்சர்கள் பதவிகளை தங்களுக்கு வழங்கும்படி பாஜக தரப்பில் வலியுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நேற்று மாலை தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்க உரிமைக்கோரி துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனிடம் முதல்வர் ரங்கசாமி கடிதம் அளித்தார். என்.ஆர்.காங்கிரஸ், பாஜக, அதிமுக, லஜக எம்எல்ஏக்கள் அப்போது உடனிருந்தனர்.இச்சந்திப்புக்கு பிறகு முதல்வர் ரங்கசாமி செய்தியாளர்களிடம் கூறும்போது, “புதுச்சேரியில் என்டிஏ ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்கக்கோரி ஆளுநரிடம் கடிதம் அளித்துள்ளேன். வரும் 13-ம் தேதி காலை முதல்வராக பதவி ஏற்கிறேன்” என்றார். தொடர்ந்து பாஜக மாநிலத்தலைவர் வி.பி.ராமலிங்கம் கூறுகையில்,“ஏற்கெனவே கடந்த என்டிஏ கூட்டணியில் இருந்தது போல் புதிதாக அமையும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் பாஜகவுக்கு பேரவைத்தலைவர், இரு அமைச்சர்கள் தர கோரியிருந்தோம். பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது” என்றார்.இதைத் தொடர்ந்து, துணைநிலை ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில், “புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள, என். ஆர்.காங்கிரஸ் தலைவர் ரங்கசாமி ஆளுநர் கைலாஷ்நாதனை சந்தித்தார்.அப்போது புதுச்சேரியில் ஆட்சி அமைக்க உரிமை கோரி எம்எல்ஏக்களின் ஆதரவு கடிதத்தை அளித்தார். கடிதம் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “தமிழக ஆளுநர் சட்டப்படியே செயல்படுகிறார்” - வானதி சீனிவாசன்



சென்னை: மே,10

“தமிழக ஆளுநர் அரசியலமைப்புச் சட்டத்தின்படியே செயல்படுகிறார்” என்று பாஜக மகளிர் அணி தேசிய தலைவர் வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.சென்னை தி.நகரில் உள்ள பாஜக மாநில தலைமை அலுவலகமான கமலாலயத்தில் செய்தியாளர்களிடம் அவர் இன்று கூறியது: “தமிழகத்தில் திமுக, அதிமுக, பாஜக, கம்யூனிஸ்ட்கள், விசிக, தேமுதிக, பாமக என கட்சிகளுக்கும் மக்கள் தகுந்த வாய்ப்புகளை வழங்கியிருக்கிறார்கள். எனவே, தமிழக அரசியல் திசை என்பது ஏதோ ஒரு பக்கம் மட்டுமே சாய்ந்துவிட்டதாகக் கருதுவது தவறானது.கடந்த 2014-ம் ஆண்டு முதல், பிரதமர் மோடி தமிழகத்தின் வளர்ச்சியை முன்னிறுத்தி லட்சக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை வழங்கியுள்ளார். தமிழகத்தின் எதிர்காலத்தை மனதில்கொண்டு அவர் ஆற்றியுள்ள பணிகளை, மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியைத் தொடர்ந்து பாஜக முன்னெடுக்கும்.தேர்தல் வெற்றி - தோல்விகளை மட்டும் அடிப்படையாகக்கொண்டு பாஜகதன்அரசியல்செயல்பாடுகளை தீர்மானிப்பதில்லை. நாங்கள் அதிகாரத்துக்காக உழைக்கிறோம், வெற்றிக்காக போராடுகிறோம் என்பது உண்மைதான். ஆனால், அதேவேளையில் மக்களுக்கான எங்கள் கடமைகளையும், பணிகளையும் ஒரு சதவீதம்கூட குறைத்துக்கொள்ளாமல், எப்போதும் மக்களுடன் நின்று அவர்களுக்காக உழைப்போம். தவெகவுக்கு மக்கள் தற்போது ஒரு மிகப்பெரிய ஆதரவை வழங்கியிருக்கிறார்கள். அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அதிமுக - திமுக கூட்டணி அமைப்பது தொடர்பாக எங்களுக்கு எந்தவித தகவலும் வரவில்லை. ஆளுநரை பொறுத்தவரை, அவர் அரசியலமைப்புச் சட்டத்தின் படியே செயல்படுகிறார். விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை என்பதை அவர் தெளிவாகவே உணர்த்தியுள்ளார்.தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கு மறுவாழ்வு அளித்ததே திமுகதான். ஆனால், தேர்தல்முடிவுகளுக்குப் பிறகு ஒரு கூட்டணியில் இருந்துகொண்டு காங்கிரஸ் இத்தகைய முடிவுகளை எடுக்கிறது என்றால், அவர்கள் எந்த அளவுக்கு திமுகவுக்குத் துரோகம் இழைக்க காத்திருந்திருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது” என்று அவர் கூறினார்.

## “தவெகவுக்கு அமமுக ஆதரவு தெரிவிக்கவில்லை” - தினகரன் விளக்கம்



சென்னை: மே,10

‘தமிழக வெற்றிக் கழகத்துக்கு அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ஆதரவு தெரிவித்திருப்பதாக ஒரு சில ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் தவறானது. அடிப்படை ஆதாரமற்றது’ என அக்கட்சியின் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்தார்.இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், தமிழக வெற்றிக் கழகத்துக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாக ஒரு சில ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் தவறானது. அடிப்படை ஆதாரமற்றது. அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மன்னார்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.காமராஜ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்களுடன் அவர்கள் தங்கியிருக்கும் புதுச்சேரி தனியார் விடுதியிலேயே தங்கியிருக்கிறார்.எனவே, ஜனநாயகத்தின் நான்காம் தூண்களாகப் போற்றப்படும் ஊடகங்களும், பத்திரிகைகளும் தங்களின் கடமையையும், பொறுப்புணர்வையும் உணர்ந்து இதுபோன்ற அடிப்படை ஆதாரமற்ற செய்திகளை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலேயே அங்கம் வகிப்பது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது’ எனத் தெரிவித்துள்ளார்.

## தமிழக மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம்: ஐகோர்ட் உத்தரவு



மதுரை: மே,10

மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்யும் தொழிலாளர் ஆய்வாளரின் உத்தரவுக்கு எதிராக மின்வாரியம் தாக்கல் செய்த மேல்முறையீடு மனுக்களை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. நீதிமன்றத்தின் இந்த உத்தரவால் தொழிலாளர் ஆய்வாளர் வழங்கிய பணிநிரந்தர ஆணைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.மதுரை, தேனி, தூத்துக்குடி, விருதுநகர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் மின்சார வாரியத்தில் குழி தோண்டுதல், மின்கம்பிகள் அமைத்தல், பழுது நீக்குதல் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகளில் 1998 முதல் 2014 வரை ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணிநிரந்தரம் கோரி தொழிலாளர் ஆய்வாளரிடம் மனு அளித்தனர்.இதை விசாரித்த தொழிலாளர் ஆய்வாளர், ஒப்பந்தத் தொழிலாளர்கள் மின்வாரியத்தில் 24 மாதங்களில் 480 நாட்கள் தொடர்ந்து பணியாற்றி இருப்பதால் அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என உத்தரவிட்டது.இதை எதிர்த்து, மின்வாரியம் சார்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீடு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மனுக்களை நீதிபதி பி.புகழேந்தி விசாரித்தார். மின்சார வாரியம் சார்பில், ஒப்பந்தத் தொழிலாளர்கள் நேரடியாக வாரியத்தால் பணியமர்த்தப்படவில்லை. அவர்கள் ஒப்பந்ததாரர்கள் மூலமே நியமிக்கப்பட்டனர். பணிநிரந்தரம் கோரும் தொழிலாளர்கள் தொழிலாளர் நீதிமன்றத்தை தான் அணுக வேண்டும். தொழிலாளர் ஆய்வாளருக்கு இதற்கு அதிகாரம் இல்லை.இவர்கள் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டதால் இவர்களுக்கு பணிநிரந்தரச் சட்டம் பொருந்தாது என தெரிவிக்கப்பட்டது. பின்னர் நீதிபதி பிறப்பித்த உத்தரவு: பணிநிரந்தரச் சட்டத்தின்படி, ஒரு தொழிலாளர் 480 நாட்கள் பணியாற்றினாரா என்பதை ஆய்வு செய்து, அவருக்குப் பணி நிரந்தரம் வழங்கத் தொழிலாளர் ஆய்வாளருக்கு முழு அதிகாரம் உண்டு. தொழிலாளர்கள் மேற்கொண்ட குழி தோண்டுதல், மின் கம்பம் நடுதல் உள்ளிட்ட பணிகள் கட்டுமானப் பணிகள் அல்ல, அவை மின்வாரியத்தின்நிரந்தரமான மற்றும் அத்தியாவசியப் பணிகள் ஆகும். ஏற்கெனவே இதேபோன்ற சூழலில் இருந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுப்படி பணிநிரந்தரம் வழங்கப்பட்டது.எனவே, இந்தத் தொழிலாளர்களுக்கும் அதே பலனை வழங்குவது அவசியமானது என தெரிவித்து, மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. தொழிலாளர் ஆய்வாளர் வழங்கிய பணிநிரந்தர ஆணைகள் உறுதி செய்யப்படுகின்றன. இவ்வாறு நீதிபதி உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

## “தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு வாழ்த்துகள்” - எடப்பாடி பழனிசாமி



சென்னை: மே,10

‘தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்’ என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், “நடைபெற்று முடிந்த 17-வது தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தேர்தலில் பல்வேறு கட்சிகள் சார்பில் வேட்பாளர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்” என்று கூறியுள்ளார்.தமிழகத்தில் பரபரப்பான அரசியல் சூழல் நீடிக்கும் நிலையில், பழனிசாமியின் இந்தப் பதிவு ஒரு ‘சிக்னல்’ ஆக கருதப்படுகிறது.முன்னதாக, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றிய தவெக, தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. எனினும், ஆட்சி அமைக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், முதலில் 5 எம்எல்ஏக்கள் கொண்ட காங்கிரஸ் கட்சி, திமுக கூட்டணியில் இருந்து விலகி தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தது. 2 தொகுதிகளில் போட்டியிட்டுள்ள விஜய், ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டிய நிலையில், காங்கிரஸ் ஆதரவு மூலம் தவெக பலம் 112 ஆக உயர்ந்தது.இதையடுத்து, ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநர் அர்லேகரை சந்தித்து, விஜய் கடிதம் வழங்கினார். ஆனால், ‘ஆட்சி அமைக்கத் தேவையான 118 உறுப்பினர்களின் பட்டியலை சமர்ப்பித்தால் மட்டுமே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்’ என்று ஆளுநர் உறுதிபடத் தெரிவித்தார். பெரும்பான்மைக்கு 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் தலைவர்களை தவெக நிர்வாகிகள் சந்தித்து ஆதரவு கோரினர்.இதன் தொடர்ச்சியாக, தவெகவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக தீவிரமாக ஆலோசித்து வந்த இடதுசாரி கட்சிகள், இறுதியில் தவெகவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக நேற்று அறிவித்தன. இதற்கான அதிகாரப்பூர்வ ஆதரவுக் கடிதத்தை சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சிடிஆர். நிர்மல்குமாரிடம் அக்கட்சித் தலைவர்கள் வழங்கினர். இதன்மூலம் தவெக பலம் 116 ஆக உயர்ந்தது.இதற்கிடையே ஐயூஎம்எல் கட்சியும் தவெகவுக்கு ஆதரவு அளித்துள்ளதாக தகவல் வெளியான நிலையில் அக்கட்சி இதற்கு மறுப்பு தெரிவித்தது. அதேபோல், விசிக தலைவர் திருமாவளவனுடனும் தவெகவினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதைத் தொடர்ந்து, இடதுசாரி தலைவர்கள் மற்றும் திமுக தலைவர் ஸ்டாலினுடன் திருமாவளவன் ஆலோசனை நடத்தியதாகவும் தகவல் வெளியானது. இந்நிலையில், தவெகவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பான தனது முடிவை இன்று மாலை தெரிவிக்கவுள்ளார் திருமாவளவன்.முன்னதாக, நேற்று மாலை 7 மணி அளவில் ஆளுநர் மாளிகை சென்ற விஜய், ஆளுநர் அர்லேகரை 3-வது முறையாக சந்தித்து, எம்எல்ஏக்களின் ஆதரவுக் கடிதங்களை வழங்கினார். அதன்பின்னர், தியாகராய நகரில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் அலுவலகங்களுக்கு சென்ற விஜய், அங்கு அக்கட்சிகளின் தலைவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். தவெகவுக்கு பெரும்பான்மைக்கான 118 இடங்கள் கிடைக்காத நிலையில், ஆட்சி அமைப்பது தொடர்பாக ஆளுநரிடம் இருந்து அழைப்பு விடுக்கப்படவில்லை.

## தவெகவை ஆட்சியமைக்க அழைக்காத ஆளுநரை கண்டித்து தமிழகம் முழுவதும் காங்கிரஸ் ஆர்ப்பாட்டம்



சென்னை: மே,10

தவெகவை ஆட்சியமைக்க அழைக்காத ஆளுநர் ஆர்.வி.அர்லேகரை கண்டித்து, தமிழகம் முழுவதும் காங்கிரஸ் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக 108 இடங்களில் வெற்றி பெற்றது. ஆட்சியமைக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை. இந்நிலையில், ஆட்சியமைக்க அழைக்குமாறு தவெக தலைவர் விஜய், ஆளுநர் ஆர்.வி.அர்லேகரை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தார்.அதை ஆளுநர் ஏற்காமல், 118 எம்எல்ஏக்கள் ஆதரவு இருந்தால் மட்டுமே அழைக்க முடியும் என திட்டவட்டமாக தெரிவித்திருந்தார். இந்நிலையில், எம்எல்ஏக்களின் ஆதரவை நிரூபிக்க வேண்டியது சட்டப்பேரவை தான். ஆளுநரிடம் நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. தவெக ஆட்சியமைப்பதை விரும்பாமல், பாஜக செய்யும் சதி என அரசியல் கட்சிகள் விமர்சித்து வந்தன. இந்நிலையில், இந்திய அரசியல் சட்டத்துக்கு எதிராக தவெக ஆட்சியமைக்க கூடாது என்று பாஜக அரசின் கைப்பாவையாக ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் செயல்படுவதாக குற்றம்சாட்டி காங்கிரஸ் சார்பில், தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை அண்ணா சாலையில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், தமிழக மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் பங்கேற்று, ஆளுநர் மற்றும் மத்திய பாஜகவுக்கு எதிராக கண்ட கோஷங்கள் எழுப்பினார்.இந்த ஆர்ப்பாட்டத்தில் செல்வப் பெருந்தகை பேசும்போது, “தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக தவெக வெற்றி பெற்றுள்ளது. ஆனாலும், தவெக ஆட்சி அமைக்க கூடாது என்ற நோக்கத்தில், இந்திய அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராக பாஜக மற்றும் அவர்களின் கைப்பாவையாக ஆளுநர் செயல்படுகிறார். அவர்களின் இந்த செயல்பாட்டை கண்டித்து மாவட்ட தலைநகரங்களில் காங்கிரஸ் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது” என்றார். ஆர்ப்பாட்டத்தின் முடிவில்கிரிஷ் சோடங்கர் செய்தியாளர்களிடம் கூறும்போது, “தமிழக சட்டப்பேரவை தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பு ஆளுநர் மற்றும் பாஜகவால் சிதைக்கப்பட்டுள்ளது. இது இந்திய அரசமைப்பு சட்டம், மக்களாட்சி மீதான தாக்குதல். இதை அனுமதிக்க முடியாது. தமிழக மக்களின் தீர்ப்புக்கு காங்கிரஸ் ஆதரவாக இருக்கும். அதற்காகவே காங்கிரஸ், தவெகவுக்கு ஆதரவு அளிக்கிறது.சமூக விரோத சக்திகள் தமிழகத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நுழைய அனுமதிக்க மாட்டோம். காங்கிரஸ் எம்எல்ஏக்கள் யாரும் விலை போகவில்லை அனைவரும் ஒற்றுமையாக தவெகவுக்கு ஆதரவாக இருக்கிறார்கள்” என்றார்.இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில முன்னாள் தலைவர் கே.வி.தங்கபாலு, துணைத் தலைவர் சொர்ணா சேதுராமன், அமைப்புச் செயலாளர் ராம்மோகன், மாவட்ட தலைவர் கராத்தே செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மயிலாடுதுறை ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ்- திமுகவினர் தகராறு



மயிலாடுதுறை: மே,10

தவெக-வை ஆட்சி அமைக்க அழைக்காத தமிழக ஆளுநரைக் கண்டித்து மயிலாடுதுறையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது காங்கிரஸ் - திமுகவினரிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தால் பரபரப்பு ஏற்பட்டது. தவெகவை ஆட்சி அமைக்க அழைக்காத தமிழக ஆளுநரை கண்டித்து மயிலாடுதுறை கிட்டப்பா அங்காடி முன்பு காங்கிரஸ் கட்சி சார்பில்நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் காங்கிரஸ் மாவட்டத் தலைவர் பானு சேகர் தலைமையில் கட்சி நிர்வாகிகள் 50-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பின்னர் அங்கிருந்து அனைவரும் கலைந்து சென்று கொண்டிருந்தனர்.அப்போது அங்கு வந்த திமுக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மருது, முன்னாள் கவுன்சிலர் ரகு உள்ளிட்ட திமுகவினர், தங்கள் கூட்டணியில் இருந்து விலகி தவெகவுக்கு ஆதரவு அளித்ததை கண்டித்து காங்கிரஸ் கட்சியினருக்கு எதிராக கடுமையாக விமர்சித்தனர்.மேலும், காங்கிரஸ் வட்டாரத் தலைவர் ராஜாவை பிடித்து தள்ளியதில் அவர் தடுமாறி கீழே விழுந்தார். பின்னர், காங்கிரஸ் கொடிகளை கிழித்து சாலையில் போட்டு ராகுல் காந்திக்கு எதிராக முழக்கமிட்டனர்.அப்போது, ‘‘திமுகவுக்கு துரோகம் செய்த நீங்கள் எல்லாம் ஆளுநரை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதா’’ என அவர்களை நோக்கி கேள்வி எழுப்பினர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.காங்கிரஸ் எம்எல்ஏக்கள் தவெகவுக்கு ஆதரவு அளித்ததைத் தொடர்ந்து, மயிலாடுதுறை தொகுதியில் இருந்து வெற்றி பெற்ற காங்கிரஸ் எம்எல்ஏ ஜமால் முகமது யூனூஸ், எம்.பி. சுதா ஆகியோரை திமுக தொண்டர் கணேசமூர்த்தி என்பவர் செல்போனில் தொடர்பு கொண்டு பேசிய ஆடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# “புதிய ஆட்சி அமைய உடனடி நடவடிக்கை எடுப்பீர்” - ஆளுநருக்கு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை: மே,10
‘தமிழகத்தில் புதிய அரசு அமைவதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, அரசியல் சட்டப்படி, புதிய ஆட்சி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை ஆளுநர் உடனடியாக எடுத்திட வேண்டும்’ என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், ‘தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியாகி, மக்களால் தேர்வு செய்யப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்களின் பட்டியலைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டு விட்டது. ஏற்கெனவே இருந்த சட்டமன்றத்தையும் கலைத்து ஆளுநர் ஆணையும் பிறப்பித்து விட்டார்.இப்படியொரு நிலையில், தேர்தலில் வென்ற சட்டப்பேரவை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வதற்கும், மாநிலத்தின் நலனை முன்னெடுத்துச் செல்வதற்கும் புதிய அரசு அமைய வேண்டியது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல, ஜனநாயகத்தின் மிக முக்கியப் பணி.இந்தச் சூழ்நிலையில் அரசு அமைவதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, அரசியல் சட்டப்படி, புதிய ஆட்சி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை ஆளுநர் உடனடியாக எடுத்திட வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.

# விஜய் ஆட்சி அமைக்க விசிக ஆதரவளிக்க முடிவு - பெரும்பான்மையை எட்டும் தவெக



சென்னை: மே,10
தவெக ஆட்சியமைக்க இடதுசாரிகள் ஆதரவளித்த நிலையில், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் தனது ஆதரவை தெரிவிக்க முடிவு செய்துள்ளது.விசிக செய்தித் தொடர்பாளர் பாவலன், “விஜய்யின் தலைமையில் தவெக ஆட்சி அமைப்பதற்கு சனிக்கிழமை காலை ஆதரவு கடிதம் அனுப்பப்படும்” என்று தகவல் பகிர்ந்துள்ளார். இதனிடையே, “ஆட்சியிலும் பங்கு; அதிகாரத்திலும் பங்கு; இது திருமா காலம் - இனி உயர்வோம் மேலும் மேலும்!” என்று வன்னியரசு ட்வீட் செய்துள்ளார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களில் வெற்றிபெற்று தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது, அக்கட்சிக்கு 5 உறுப்பினர்களை கொண்ட காங்கிரஸ் கட்சி ஆதரவளித்த நிலையில், விஜய் ஆட்சியமைக்க மேலும் 6 பேரின் ஆதரவு தேவைப்பட்டது. ஆட்சியமைக்க அழைக்கக் கோரி ஆளுநரிடம் தவெக தலைவர் விஜய் கோரிக்கை வைத்த நிலையில், பெரும்பான்மைக்கான பட்டியலை அளிக்குமாறு அவர் கேட்டிருந்தார். இந்த நிலையில் விசிக, சிபிஐ மற்றும் சிபிஎம் கட்சிகளிடம் தவெக ஆதரவு கேட்டிருந்தது.இதனையடுத்து இன்று ஆலோசனை நடத்திய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை தவெக ஆட்சியமைப்பதற்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்தன.இந்தச் சூழலில், விசிக தலைவர் திருமாவளவன் கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன் இன்று ஆலோசனை நடத்தினார். இதனையடுத்து, தவெகவுக்கு விசிக ஆதரவளிப்பதாக தகவல் பகிரப்பட்டுள்ளது.

# “விஜய் முதல்வராக வருவதை தடுக்க முயற்சி” காங். எம்.பி மாணிக்கம் தாகூர் கருத்து





சென்னை: மே,10
மக்களால் தோற்கடிக்கப்பட்ட சக்திவாய்ந்தவர்கள் மீண்டும் தலையிட்டு விஜய் முதல்வராக வருவதை தடுக்க முயற்சி செய்கிறார்கள் என்று காங்கிரஸ் கட்சியின் மக்களவை உறுப்பினர் மாணிக்கம் தாகூர் எக்ஸ் சமூக வலைதளத்தில் ட்வீட் செய்துள்ளார்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவாகி உள்ள தமிழக வெற்றிக் கழகம் (தவெக) ஆட்சி அமைப்பதற்கான பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை அன்று தமிழக ஆளுநர் அர்லேகரை சந்தித்து, ஆட்சி அமைக்க உரிமை கோரினார் தவெக தலைவர் விஜய். அது தொடர்பாக ஆளுநர் மாளிகை தரப்பு இதுவரை விவரம் எதையும் வெளியிடவில்லை. இதனால் விஜய் தமிழகத்தின் முதல்வராக பதவியேற்பது தள்ளிப்போகிறது.இந்நிலையில், இது தொடர்பாக மாணிக்கம் தாகூர் ட்வீட் செய்துள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது: “மக்களால் தோற்கடிக்கப்பட்ட சக்திவாய்ந்தவர்கள் மீண்டும் தலையிட்டு விஜய் முதல்வராக வருவதை தடுக்க முயற்சி செய்கிறார்கள். மக்களின் ஜனநாயக விருப்பத்திற்கு எதிராக இன்னும் எத்தனை தடைகளை உருவாக்கப் போகிறார்கள்?அதிகாரம் மக்களின் தீர்ப்பை தாமதப்படுத்தலாம்; ஆனால் அதை என்றும் அடக்க முடியாது. மக்களின் உரிமைக்கும் நீதிக்கும் இந்தப் போராட்டம் தொடரும்” என்றார்.தமிழக வெற்றிக் கழகத்துக்கு காங்கிரஸ் (5), இந்திய கம்யூனிஸ்ட் (2) மற்றும் மார்க்சிஸ்ட் (2) ஆதரவு கடிதத்தை அதிகாரபூர்வமாக வழங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் தீர்ப்புக்கு முற்றிலும் எதிரானது திமுக + அதிமுக பேச்சு: மார்க்சிஸ்ட் கம்யூ.



சென்னை: மே,10
‘திமுக - அதிமுக இடையில் பேச்சுவார்த்தை நடப்பதாகவும், எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் ஆட்சி அமைக்க முயற்சிகள் நடப்பதாகவும் வரும் செய்திகள் மக்களின் தீர்ப்புக்கு முற்றிலும் எதிரானதாகும். இதை ஏற்க இயலாது’ என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.தவெக ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவித்து, அக்கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் வெளியிட்ட அறிக்கையில், “தமிழ்நாட்டின் சட்டமன்றத் தேர்தல் முடிவுகளில் எந்தகட்சிக்கும் பெரும்பான்மை இடங்கள் கிடைக்காத நிலையில், தமிழக வெற்றி கழகம் தனிப்பெரும்கட்சியாகஉருவெடுத்துள்ளது. இந்தப் பின்னணியில் ஜோசப் விஜய் ஆட்சி அமைப்பதற்கான உரிமை கோரி உள்ள நிலையில், அவரை ஆட்சி அமைக்குமாறும், சட்டமன்ற அவையில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறும் முடிவெடுக்க வேண்டிய ஆளுநர், அவரை அழைக்க மறுத்து இருப்பது ஜனநாயக விரோத நடவடிக்கை ஆகும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்குழு சுட்டிக்காட்டுகிறது.ஆளுநர், அரசியல் பாரபட்சத்தோடு செயல்பட்டு வருவதும், ஏற்கெனவே உள்ள மரபுகள், நீதிமன்ற தீர்ப்புகள், அரசியல் சாசன கோட்பாடுகளை மீறி இருப்பதும் முற்றிலும் ஏற்க இயலாத நடவடிக்கை ஆகும். தமிழக வெற்றிக் கழகம், ஆளுநரின் இத்தகைய நடவடிக்கையை வெளிப்படையாக கண்டிப்பதே மாநில உரிமைகள், கூட்டாட்சி கோட்பாடு ஆகியவற்றில் அக்கட்சி கொண்டுள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதாக இருக்கும் என்பது ஜனநாயக எண்ணம் கொண்டோரின் அழுத்தமான கருத்தும், எதிர்பார்ப்பும் ஆகும் என சிபிஐ(எம்) மாநிலக்குழு சுட்டிக் காட்டுகிறது.இதற்கிடையில் திமுக - அதிமுக இடையில் பேச்சுவார்த்தை நடப்பதாகவும், எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் ஆட்சி அமைக்க முயற்சிகள் நடப்பதாகவும் வரும் செய்திகள் மக்களின் தீர்ப்புக்கு முற்றிலும் எதிரானதாகும். இதை ஏற்க இயலாது. ஆளுநரின் நடவடிக்கை தமிழ்நாட்டில் சட்டமன்றத்தை முடக்கி குடியரசுத் தலைவர் ஆட்சியை புகுத்துவதற்கும், மக்களின் தீர்ப்புக்கு மாறாக குதிரை பேரம் நடந்தேறுவதற்கும், அரசியல் சந்தர்ப்பவாதத்திற்கும் வழிவகுத்து விடக் கூடாது. இது குறித்து விவாதித்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ( மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்குழு, தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி திணிக்கப்படுவதையும், கொல்லைப் புற வழியாக பாஜக அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிப்பதையும் அனுமதிக்கக் கூடாது என்று முடிவு செய்தது.இத்தகைய பின்புலத்தில் ஜோசப் விஜய் கடிதம் மூலம் கேட்டுக்கொண்ட அடிப்படையில் அரசு அமைக்க ஆதரவை வழங்குவது என்றும், அதன் மூலம் ஆளுநரின் ஜனநாயக விரோத நடவடிக்கையை முறியடித்து மக்கள் தீர்ப்பிற்கான மரியாதையை உறுதி செய்வது என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தீர்மானித்துள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரும் சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறும் போது விஜய் அரசுக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள். அதேநேரத்தில் அமைச்சரவையில் பங்கேற்காமல் வெளியிலிருந்து ஆதரவு அளிப்பது என்றும் மாநிலக்குழு முடிவு செய்துள்ளது.புதிய அரசாங்கம் மதச்சார்பின்மை, எளிய மக்களை உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி, கூட்டாட்சி, சமூக நீதி கோட்பாடுகளை உயர்த்திப் பிடித்து மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுகிற வகையில் செயல்பட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக் குழு வலியுறுத்துகிறது” என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தவெகவுக்கு ஆதரவு இல்லை ஐயூஎம்எல் விளக்கம்



சென்னை: மே,10
தமிழக சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க தவெகவுக்கு ஆதரவு இல்லை என இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி விளக்கம் அளித்துள்ளது.இதுகுறித்து அந்த கட்சியின் சமூக வலைதளப் பதிவில், ‘தவெக ஆதரவு இல்லை. திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தொடர்கிறது என காதர் மொகிதீன் கூறினார்’ என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, ஐயுஎம்எல் தலைவர் காதர் மொகிதீன் வெளியிட்ட அறிக்கையில், ‘தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இடம்பெற்று பாபநாசம், வாணியம்பாடி ஆகிய இரண்டு தொகுதிகளில் முறையே ஏ.எம். ஷாஜஹான், சையது ஃபரூக் பாஷா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் ஜனநாயக முறையிலான ஆட்சி நிறுவப்படுவதற்கு திமுக தலைவர் மு. க. ஸ்டாலின், தமிழக ஆளுநருக்கு விடுத்துள்ள வேண்டுகோளை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முழு மனதோடு வரவேற்கிறது. சட்டமன்றத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீகினுடைய இரண்டு உறுப்பினர்களும் ஆளுநர் மேற்கொள்ளக் கூடிய அரசு அமைப்புக்கான அனைத்து செயல்பாடுகளுக்கும் துணை நிற்பர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்’ எனத் தெரிவித்துள்ளார்.

# எடப்பாடி பழனிசாமியை ஆட்சியமைக்க அழைக்குமாறு ஆளுநருக்கு டிடிவி தினகரன் கடிதம்




சென்னை: மே,10
அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை முதல்வராக கொண்டு புதிய அரசை அமைக்க அழைப்பு விடுக்குமாறு தமிழக பொறுப்பு ஆளுநர் அர்லேகருக்கு அமமுக பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன் கடிதம் வழங்கியுள்ளார். ஆளுநருக்கு டிடிவி.தினகரன் எழுதிய கடிதத்தில், ‘ அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் என்ற முறையில், தமிழ்நாட்டின் புதிய அரசை அமைப்பதற்கு எடப்பாடி பழனிசாமி உரிமை கோர எனது முழு ஆதரவை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். மன்னார்குடி சட்டப்பேரவைத் தொகுதியில் (167) போட்டியிட்ட எங்கள் கட்சியின் வேட்பாளர் எஸ்.காமராஜ், அத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மன்னார்குடி சட்டப்பேரவைத் தொகுதியின் உறுப்பினரான எஸ்.காமராஜும், மேற்கண்ட உரிமை கோரலுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இக்கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளார். எடப்பாடி பழனிசாமியை புதிய அரசை அமைப்பதற்கு அழைக்குமாறும், தமிழ்நாட்டின் முதல்வராகப் பதவியேற்கச் செய்யுமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்’ என அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# “ஊழல் பெருச்சாளிகள்... தமிழக பாஜகவை மோடி, அமித் ஷா தூய்மைப்படுத்த வேண்டும்” - ஏ.என்.எஸ்.பிரசாத்





சென்னை: மே,10
‘தமிழக பாஜகவை பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, தேசியத் தலைவர் நிதின் நபின் தூய்மைப்படுத்த வேண்டும். தமிழக பாஜகவின் மோசமான தோல்விக்கு தார்மிக பொறுப்பேற்று நயினார் நாகேந்திரன் பதவி விலக வேண்டும்’ என தமிழக பாஜக மாநில முன்னாள் செய்தித் தொடர்பாளர் ஏ.என். எஸ்.பிரசாத் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்ற தேர்தலில் நடிகர் விஜய், திமுகவை வீழ்த்த தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய வேண்டும் என்று சொல்லி இருந்தேன். அப்போது, தமிழக பாஜகவின் செய்தி தொடர்பாளர் பதவியில் இருந்து என்னை விடுவித்தார்கள்.கட்சியின் நலன் கருதி தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றி வாய்ப்பை மிக பிரம்மாண்டமாக முடிவு செய்யும் வண்ணம், திமுக 234 சட்டமன்ற தொகுதிகளிலும் வீழ்த்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் நான் கூறிய கருத்துக்கு எந்தவித விளக்கமும் கேட்காமல் என் மீது அன்று நடவடிக்கை எடுக்கப்பட்டது.என் மீது எந்த தவறும் இல்லை என தமிழக பாஜக தலைமை நன்கு உணர்ந்த உடன், நான் எந்த கடிதமும் கொடுக்காமல், திடீரென்று பத்து நாட்களுக்குள், நான் மன்னிப்பு கேட்டு கடிதம் கொடுத்ததாக என்னை அவமானப்படுத்தும் விதத்தில், மீண்டும் செய்தி தொடர்பாளராக என்னை தொடர மாநில தலைமையில் இருந்து அறிவிப்பு வெளியிடப்பட்டது.தற்பொழுது நடிகர் விஜய் ஆட்சி அமைய அனைத்து கட்சிகளும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று நான் கூறிய அறிக்கை கட்சியின் நிலைப்பாட்டிற்கு எதிராக இருப்பதாக கூறப்பட்டதன் அடிப்படையில், கட்சியின் செய்தி தொடர்பாளர் பதவியில் என்னை நீக்கி இன்று மதியம் அறிவிப்பு வெளிவந்துள்ளது. தமிழக முதல் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில், தமிழக மக்கள் நடிகர் விஜய்க்கு மிகப்பெரிய வெற்றியை அளித்ததை அனைத்து கட்சிகளும் வரவேற்க வேண்டும். அனைத்து தலைவர்களும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று நேர்மறை அரசியலை எனது தனிப்பட்ட கருத்தாக குறிப்பிட்டு இருந்தேன்.இதுகுறித்து பிரதமர் மோடியிடமும், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவிடமும், தேசியத் தலைவர் நிதின் நபீன் ஆகியோரிடமும் வலியுறுத்துவேன் என்று கூறியிருந்தேன்.நடிகர் விஜய் அரசமைப்பதை பாஜக தடுக்கிறது என்று காங்கிரஸ் பிரச்சாரம் செய்யும் என்பதை நன்கு உணர்ந்து, தொலைநோக்கு சிந்தனையுடன் அதை முறியடிக்க வேண்டும் என்கிற அடிப்படையில் பாஜகவிற்கும், பிரதமர் மோடிக்கும், மத்திய அரசுக்கும் அவப்பெயர் வந்துவிடக் கூடாது என்கிற எண்ணத்தில் அறிக்கை அளித்திருந்தேன். எனது அறிக்கையை முழுவதுமாக படித்தால் பாஜகவின் பெருமையை, பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்கள், மக்கள் விரோத திமுக ஆட்சியை வீழ்த்துவதற்கு இந்த தேர்தலில் ஆற்றிய பங்களிப்பை தெளிவாக குறிப்பிட்டு இருந்தேன்.அதேசமயம் தமிழக மக்கள், எதிர்கால தமிழகத்தின் மாற்றத்திற்கான தலைவராக நடிகர் விஜய்யை முதல்வராக வேண்டி வாக்களித்துள்ளார்கள். நடிகர் விஜய் பெற்ற வெற்றிக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி மிக முக்கியமான காரணமாக, அடித்தளமாக இருந்துள்ளது என்கிற உண்மையை மிகத் தெளிவாக குறிப்பிட்டிருந்தேன்.

# விஜய் ஆட்சி அமைக்க இடதுசாரிகள் ஆதரவு: 118-க்கு இன்னும் 2 மட்டுமே தேவை!





சென்னை: மே,10
தவெக ஆட்சியமைக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவளித்த நிலையில், தற்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்று தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது, அக்கட்சிக்கு 5 உறுப்பினர்களை கொண்ட காங்கிரஸ் கட்சி ஆதரவளித்த நிலையில், விஜய் ஆட்சியமைக்க மேலும் 6 பேரின் ஆதரவு தேவைப்பட்டது. ஆட்சியமைக்க அழைக்கக் கோரி ஆளுநரிடம் தவெக தலைவர் விஜய் கோரிக்கை வைத்த நிலையில், பெரும்பான்மைக்கான பட்டியலை அளிக்குமாறு அவர் கேட்டிருந்தார். இந்த நிலையில் விசிக, சிபிஐ மற்றும் சிபிஎம் கட்சிகளிடம் தவெக ஆதரவு கேட்டிருந்தது.இதனையடுத்து இன்று ஆலோசனை நடத்திய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தவெக ஆட்சியமைப்பதற்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக அறிவித்தது. அதனைத் தொடர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தவெகவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது. இரு கட்சிகளுமே ஆதரவுக் கடிதங்களை அளித்துள்ளன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கீழ்வேளூரில் போட்டியிட்ட லதா மற்றும் பத்மநாதபுரத்தில் போட்டியிட்ட செல்லசாமி ஆகியோர் வெற்றி பெற்றனர்.இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திருத்துறைப்பூண்டியில் போட்டியிட்ட மாரிமுத்து மற்றும் தளியில் போட்டியிட்ட ராமச்சந்திரன் ஆகியோர் வெற்றி பெற்றனர். இடதுசாரிகள் ஆதரவு தெரிவித்த காரணத்தால் தவெகவின் ஆதரவு 116 ஆக உயர்ந்துள்ளது. இந்த நிலையில், தவெக ஆட்சியமைக்க மேலும் 2 உறுப்பினர்களின் ஆதரவு மட்டுமே தேவை. இந்தச் சூழலில், 2 உறுப்பினர்களை கொண்ட விசிக இன்று மாலை தங்களின் முடிவை அறிவிப்பதாக கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்திய கம்யூனிஸ்ட் ஆதரிப்பது ஏன்?இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்ட அறிக்கையில், “இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் 08.05.2026-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி சென்னை சூளைமேடு, அமீர் ஜான் தெருவில் உள்ள ஏஐபிஇயூ அலுவலகம் ‘தாரக் இல்ல’த்தில் கே.சந்தானம் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:தமிழ்நாடு 17-வது சட்டப்பேரவைக்கான தேர்தலில் மதவெறுப்பு அரசியல் சக்திகளை உறுதிபட தோற்கடித்துள்ள தமிழ்நாடு வாக்காளர்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழு பாராட்டுகிறது. போட்டியிட்ட அணிகளில் மிக அதிகமான இடங்களை தமிழக வெற்றி கழகத்துக்கு மக்கள் வழங்கியிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மதிக்கிறது. அதிக இடங்களைப் பெற்ற தமிழக வெற்றி கழகத்தை ஆட்சி அமைக்க அழைப்பதற்கு பதிலாக ஆர்எஸ்எஸ், பாஜக ஒன்றிய அரசின் அரசியல் கருவியாக செயல்படும் ஆளுநர், தன்னிடம் தனிப்பெரும்பான்மையைக் கடிதம் மூலம் நிரூபிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்திருப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டதாகும். குடியரசுத் தலைவர் ஆட்சியை தமிழ்நாட்டில் அமல்படுத்தி புறவழியாக பாஜகவின் ஆட்சியை திணிக்க இதன் மூலம் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு இடமளிக்காத வகையில் தமிழக வெற்றி கழகத்தின் ஆட்சி அமைந்திட வெளியிலிருந்து நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரவு தருவது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக்குழு ஒருமனதாக தீர்மானிக்கிறது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மார்க்சிஸ்ட் ஆதரவு ஏன்?மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் வெளியிட்ட அறிக்கையில், “தமிழ்நாட்டின் சட்டமன்றத் தேர்தல் முடிவுகளில் எந்தகட்சிக்கும் பெரும்பான்மை இடங்கள் கிடைக்காத நிலையில், தமிழக வெற்றி கழகம் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. இந்தப் பின்னணியில் ஜோசப் விஜய் ஆட்சி அமைப்பதற்கான உரிமை கோரி உள்ள நிலையில், அவரை ஆட்சி அமைக்குமாறும், சட்டமன்ற அவையில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறும் முடிவெடுக்க வேண்டிய ஆளுநர், அவரை அழைக்க மறுத்து இருப்பது ஜனநாயக விரோத நடவடிக்கை ஆகும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்குழு சுட்டிக்காட்டுகிறது.

# யார் இந்த ஜெகதீஷ்? - விஜய்யின் வெற்றிக்குப் பின்னால் இருக்கும் 'ரூட்' வியூகம்!



திரையுலகில் நடிகராக உச்சம் தொட்ட விஜய், இன்று தமிழக அரசியலில் தனது தமிழக வெற்றிக் கழகத்தின் மூலம் தவிர்க்க முடியாத சக்தியாக உருவெடுத்துள்ளார். இந்த அபாரமான வளர்ச்சிக்கு பின்னால் திரைமறைவில் இருந்து மூளையாக செயல்பட்டவர்களில் ஒருவர்தான் அவரது மேலாளர் ஜெகதீஷ் பழனிசாமி. சினிமாவில் கடந்த 10 ஆண்டுகளாக விஜய்யின் பிராண்ட் மதிப்பை உயர்த்தியதில் தொடங்கி, தமிழக வெற்றிக் கழகத்தின் டிஜிட்டல் ராஜ்ஜியம் வரை ஜெகதீஷ் மற்றும் அவரது 'ரூட்' நிறுவனம் ஆற்றிய பங்கு தற்போது மற்ற அரசியல் கட்சிகளின் பார்வையை ஒட்டுமொத்தமாக திருப்பியிருக்கிறது.தமிழக அரசியல் வரலாற்றில் எம்ஜிஆருக்கு நிகரான ஒரு பிம்பமாக விஜய்யை இன்று கொண்டு வந்து நிறுத்தி இருப்பதற்கு பின்னால் பல காரணிகள் உள்ளன. அதில் ஜெகதீஷும், அவருடைய சோஷியல் மீடியா குழுவும் மிக முக்கியமான பங்காற்றியதை விவரம் அறிந்த யாரும் மறுக்க முடியாது.விஜய்யின் அரசியல் வருகைக்கான அஸ்திவாரம் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியதல்ல. அது பல ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிடப்பட்டது. இதற்குப் பின்னால் ஜெகதீஷின் ரூட் நிறுவனம் வெறும் சினிமா மேலாண்மை நிறுவனமாக மட்டுமின்றி, ஒரு மிகப் பெரிய தரவு பகுப்பாய்வு மையமாகவும் செயல்பட்டது.சமூக வலைதளங்களில் விஜய்யின் ரசிகர்கள் எங்கே இருக்கிறார்கள், அவர்கள் எந்த மாதிரியான செய்திகளைப் பகிர்கிறார்கள், எதற்கெல்லாம் உணர்ச்சிவசப்படுகிறார்கள் என்பதை ரூட் நிறுவனம் மிகத் துல்லியமாக கண்காணித்தது. இதற்காக ஆயிரக்கணக்கான டிஜிட்டல் வல்லுநர்கள் பணியமர்த்தப்பட்டனர். குறிப்பாக, இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் போன்ற தளங்களில் ஜென்ஸி தலைமுறை இளைஞர்களைக் கவர ஒரு தனித்துவமான அல்காரித வியூகம் வகுக்கப்பட்டது.சமூக வலைதளங்களில் விஜய்க்கான அல்காரிதம் எவ்வாறு இயங்குகிறது என்பதே ஓர் ஆச்சரியமான விஷயம்.ஒரு சராசரி இளைஞர் தனது இன்ஸ்டாகிராமில் விஜய்யின் ஒரு சிறிய வீடியோவையோ அல்லது ஒரு ஹேஷ்டேகையோ பார்த்தால், அடுத்த சில நிமிடங்களில் அவரது பக்கம் முழுவதும் விஜய் தொடர்பான செய்திகளாகவே மாறும் வகையில் அல்காரித நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதைச் சாத்தியமாக்க 0 முதல் லட்சக்கணக்கான ஃபாலோயர்களைக் கொண்ட ஆயிரக்கணக்கான 'ஷேடோ ஐடிக்கள்' உருவாக்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும் விஜய்யின் புகழைப் பாடும் வீடியோக்களையும், அவரது அரசியல் கருத்துகளையும் தொடர்ந்து இணையத்தில் பதிவிட்டுக் கொண்டே இருந்தன. இதன் மூலம், ஒரு செயற்கையான 'டிஜிட்டல் அலை' உருவாக்கப்பட்டது. இதுவும் இன்று சாதாரண பயனாளர்களின் அல்காரிதத்தை ஆக்கிரமித்து, விஜய்யை ஒரு தவிர்க்க முடியாத தலைவராக உருவாக்கியுள்ளது.இதன் மையப்புள்ளி 'ரூட் நிறுவனம் நிர்வகிக்கும் ஆயிரக்கணக்கான வாட்ஸ்அப் குழுக்களில் தான் இருக்கிறது. மற்ற அரசியல் கட்சிகள் தேர்தலின்போது மட்டுமே வாட்ஸ்அப் குழுக்களை தொடங்குகின்றன அல்லது ஏற்கெனவே இருக்கும் குழுக்களை வீரியமாக பயன்படுத்துகின்றன. ஆனால் ஜெகதீஷின் குழு, கடந்த ஐந்து ஆண்டுகளாகவே தமிழகத்தின் ஒவ்வொரு ரசிகர் மன்றத்தையும் ஒருங்கிணைத்து வாட்ஸ்அப் குழுக்களை வலுப்படுத்தியது.இந்தச் சங்கிலித் தொடர் அமைப்பில், ஒரு செய்தி கிளம்பினால், அது அடுத்த ஐந்து நிமிடங்களில் தமிழகத்தின் லட்சக்கணக்கான இளைஞர்களின் கைபேசிக்குச் சென்றடையும் வகையில் ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.ஆரம்பத்தில் விஜய் படங்கள் பற்றியும், சமூக வலைதளங்களுக்கான சினிமா கன்டெண்ட் பற்றியும் மட்டுமே பேசப்படும் இடங்களில் வலம் வந்த இந்த வாட்ஸ்அப் குழுக்களில், போகப் போக விஜய்யை ஒரு குடும்ப உறுப்பினர் போன்ற உணர்வை ஏற்படுத்தக்கூடிய தகவல்கள் பகிரப்பட்டன. பின்னாட்களில் விஜய்யின் அரசியல் வருகையை கொண்டாடும் இடங்களாக அவை மாறின. இது ஒருபுறமென்றால் இன்ஸ்டாகிராம் என்பது இன்றைய இளைஞர்களின் தனி உலகம். அந்த உலகத்தின் மொழியை ஜெகதீஷ் மிகச் சரியாகப் புரிந்து கொண்டார். விஜய் புகழ் பாட, அவரது படங்களில் வரும் மாஸ் வசனங்கள் கொண்ட ரீல்ஸ்களை பகிர்வதற்காக உருவாக்கப்பட்ட லட்சக்கணக்கான இன்ஸ்டா ஐடிக்கள், தமிழக வெற்றிக் கழகம் தொடங்கப்பட்ட பிறகு விஜய்யின் ஒவ்வொரு மேடைப் பேச்சையும் துண்டு துண்டாக வெட்டி, அதற்கேற்ற பின்னணி இசை மற்றும் சினிமா எடிட்டிங் நுட்பங்களுடன் வெளியிட்டன.இது அரசியல் ஒவ்வாத இளைஞர்களிடம் கூட ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தியது. விஜய்யின் அரசியல் ஒரு ஸ்டைலான விஷயமாகக் காட்டப்பட்டது. இந்த வைரல் அரசியல் முறையும்கூட தவெகவை குறுகிய காலத்தில் ஒரு மாபெரும் சக்தியாக மாற்றியது.இதன் பின்னணியில் இருந்த ஜெகதீஷின்திட்டமிடல்என்பது, காலம்காலமாக அரசியலில் ஊறிப்போன மற்ற கட்சிகளுக்குப் பெரும் சவாலாக அமைந்தது. மற்ற பெரிய அரசியல் கட்சிகள் சமூக வலைதளங்களை வெறும் அறிக்கை வெளியிடும் இடங்களாக மட்டுமே பயன்படுத்துகின்றன. ஆனால் விஜய்க்காக களமாடும் சமூக வலைதள ஐடிக்கள் இதுபோன்ற விஷயங்களை எப்போதும் சீண்டுவதில்லை.உதாரணமாக, விஜய்க்கு எதிராக ஒரு விமர்சனம் எழுந்தால், அதைத் தர்க்கரீதியாக அணுகாமல், ஒரு மிகப் பெரிய டிஜிட்டல் தாக்குதல் மூலம் அந்த விமர்சனத்தை அமுக்கிவிடும் முறை பல ஆண்டுகளாக கையாளப்பட்டு வருகிறது. விஜய்க்கு போட்டியாக கருதப்படும் நடிகர்களின் படங்கள் ரிலீஸ் ஆவதற்கு ஒருநாள் முன்பே அந்த படத்தின் பெயருடன் 'டிசாஸ்டர்' என்று சேர்க்கப்பட்ட ஹேஷ்டேக் இந்திய அளவில் ட்ரெண்ட் ஆவது வழக்கம். ஆயிரக்கணக்கான ஐடிக்கள் ஒரே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட ஹேஷ்டேக்கை டிரெண்ட் செய்வதன் மூலம், மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் உத்தியை கையாள்கின்றன. இந்த நுட்பமான மேலாண்மை முறைதான் விஜய்யின் பிம்பத்தைச் சேதமில்லாமல் காப்பாற்றி வருகிறது. இத்தனை ஆண்டு காலம் சினிமா பக்கம் கவனம் செலுத்திய இந்த ஐடிக்கள் அனைத்தும் தமிழக வெற்றிக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு அக்கட்சி கொடியுடன் அரசியல் பக்கம் வந்தது தற்செயலானதல்ல.இதனை சாத்தியப்படுத்திய ஜெகதீஷ் பழனிசாமியின் வெற்றிக்குக் காரணம், அவர் விஜய்யின் மேலாளராக மட்டும் இல்லாமல், ஒரு திறமையான பிராண்ட் மேனேஜராக செயல்படுவதுதான். ஓர் அரசியல் கட்சியின் வெற்றி என்பது களப்பணியில் மட்டுமல்ல, மக்களின் மனதில் அந்தத் தலைவர் எவ்வாறு பதிய வைக்கப்படுகிறார் என்பதில்தான் இருக்கிறது. இதைச் சமூக வலைதள அல்காரிதங்கள் மூலம் சாத்தியமாக்க முடியும் என்பதைத் தமிழகத்தில் ஜெகதீஷ் நிரூபித்திருக்கிறார்.சமூக வலைதளங்களின் ஒவ்வொரு நுணுக்கத்தையும், இளைஞர்களின் மனவோட்டத்தையும் மிகச் சரியாகக் கணித்து, அதற்கேற்ப ஒரு டிஜிட்டல் கட்டமைப்பை உருவாக்கியதுதான் விஜய்யின் வெற்றிக்கு அடிப்படை. இன்று தமிழக அரசியலில் மற்ற கட்சிகள் தங்களின் ஐடி விங்குகளை மாற்றியமைக்க முயல்வதே ஜெகதீஷ் ஏற்படுத்திய இந்தத் தாக்கத்துக்கு ஒரு சான்று. ஆனால் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக உருவாக்கப்பட்ட ஒரு டிஜிட்டல் கட்டமைப்பை தாண்டிச் செல்லவேண்டும் என்றால், அதற்கு மிகப்பெரிய ஆள்பலமும், அசுர உழைப்பும் தேவை.துரதிருஷ்டவசமாக களப் பணியில் கவனம் செலுத்திய பெரிய கட்சிகள், ஆன்லைனில் கவனம் செலுத்த தவறிவிட்டன. இதன் காரணமாகத்தான் இவ்வளவு ஆண்டுகளும் திரைக்குப் பின்னால் இருந்து செயல்பட்ட ஜெகதீஷின் பெயர் சமீபகாலமாக பொதுவெளியில் அடிபடத் தொடங்கி இருக்கிறது. பல்வேறு அரசியல் கட்சிகளும் அவரை ஏதேனும் ஒரு விவகாரத்தில் சிக்க வைக்க முடியுமா என எதிர்நோக்கி காத்திருக்கின்றனர்.எப்படி இருப்பினும் தமிழகத்தின் வருங்கால அரசியலில் டிஜிட்டல் மேலாண்மை என்பது எவ்வளவு முக்கியமானது என்பதற்கு ஜெகதீஷ் பழனிசாமி தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சிகளுக்கு உணர்த்தியிருக்கிறார்.

## கார்த்தி படத்தில் நாயகி ஆகிறார் மீனாட்சி சவுத்ரி




கார்த்தி நடிக்கவுள்ள புதிய படத்தின் நாயகியாக மீனாட்சி சவுத்ரி நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.கார்த்தி நடிப்பில் அடுத்த வெளியீடாக 'சர்தார் 2' இருக்கிறது. அதனைத் தொடர்ந்து இயக்குநர் தமிழ் இயக்கத்தில் உருவாகி வரும் 'மார்சல்' படத்தில் கவனம் செலுத்தி வருகிறார். இதனைத் தொடர்ந்து தெலுங்கு படமான 'மேட்' படத்தின் இயக்குநர் கல்யாண் சங்கர் இயக்கத்தில் நடிக்க ஒப்பந்தமானார். இதனை சித்தாரா எண்டர்டெயின்மெண்ட்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இப்படத்தின் பூஜையுடன் கூடிய படப்பிடிப்பு தொடங்கிவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் கார்த்திக்கு நாயகியாக மீனாட்சி சவுத்ரி நடித்து வருவதாக தெரிகிறது. தற்போதுள்ள அரசியல் சூழலால், இப்படத்தை இன்னும் அறிவிக்காமல் இருக்கிறார்கள். இதில் கார்த்தியுடன் முக்கிய கதாபாத்திரத்தில் யோகி பாபு நடிக்கவுள்ளார்.'மார்சல்' படப்பிடிப்பு தாமதம் ஆவதால், கல்யாண் சங்கர் படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பை முடித்துவிட திட்டமிட்டுள்ளார் கார்த்தி. அதனைத் தொடர்ந்து 'மார்சல்' படப்பிடிப்பை முடித்துவிட்டு, மீண்டும் கல்யாண் சங்கர் படத்தில் கவனம் செலுத்தவுள்ளார் கார்த்தி.

## சந்தானம் நாயகனாக நடிக்கும் புதிய படம் அறிவிப்பு




கார்த்தி நடிக்கவுள்ள புதிய படத்தின் நாயகியாக மீனாட்சி சவுத்ரி நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.கார்த்தி நடிப்பில் அடுத்த வெளியீடாக 'சர்தார் 2' இருக்கிறது. அதனைத் தொடர்ந்து இயக்குநர் தமிழ் இயக்கத்தில் உருவாகி வரும் 'மார்சல்' படத்தில் கவனம் செலுத்தி வருகிறார். இதனைத் தொடர்ந்து தெலுங்கு படமான 'மேட்' படத்தின் இயக்குநர் கல்யாண் சங்கர் இயக்கத்தில் நடிக்க ஒப்பந்தமானார். இதனை சித்தாரா எண்டர்டெயின்மெண்ட்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இப்படத்தின் பூஜையுடன் கூடிய படப்பிடிப்பு தொடங்கிவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் கார்த்திக்கு நாயகியாக மீனாட்சி சவுத்ரி நடித்து வருவதாக தெரிகிறது. தற்போதுள்ள அரசியல் சூழலால், இப்படத்தை இன்னும் அறிவிக்காமல் இருக்கிறார்கள். இதில் கார்த்தியுடன் முக்கிய கதாபாத்திரத்தில் யோகி பாபு நடிக்கவுள்ளார்.'மார்சல்' படப்பிடிப்பு தாமதம் ஆவதால், கல்யாண் சங்கர் படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பை முடித்துவிட திட்டமிட்டுள்ளார் கார்த்தி. அதனைத் தொடர்ந்து 'மார்சல்' படப்பிடிப்பை முடித்துவிட்டு, மீண்டும் கல்யாண் சங்கர் படத்தில் கவனம் செலுத்தவுள்ளார் கார்த்தி.

## மகளிர் டிவிஷன் கால்பந்து போட்டிகள் 11-ம் தேதி தொடக்கம்




சென்னை: சென்னை மாவட்ட கால்பந்து சங்கம் சார்பில் மகளிருக்கான 'ஏ', 'பி' 'சி' டிவிஷன் லீக் போட்டிகள் நடைபெற உள்ளன. இதில் 'ஏ' டிவிஷன் போட்டிகள் வரும் 11-ம் தேதி முதல் 23 ம் தேதி வரை சென்னை வியாசர்பாடி ஜீவா ரயில் நிலையம் அருகில் உள்ள கன்னிகாபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது.இதில் எஸ்டிஏடி, தமிழக காவல்துறை அணி, லைப் ஸ்போர்ட்ஸ் அகாடமி, எம்ஓபி வைஷ்ணவா கல்லூரி, சமாதானம் கால்பந்து கிளப், எஃப்சி டர்ன் புரோ, ராணி மேரி கல்லூரி, ஃபுட்பால் + ஆகிய 8 அணிகள் கலந்து கொள்கின்றன. 'பி' டிவிஷன் போட்டிகள் வரும் 12-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை அதே மைதானத்தில் நடைபெறுகின்றன. இதில் புழல் எஃப்சி, சுரேஷ் மெமோரியல் எஃப்சி, பியூயல் ஸ்போர்ட்ஸ், டெலண்ட் எஃப்சி, ரைட் டிராக், பெகாசஸ் ஆகிய அணிகள் பங்கேற்கின்றன.'சி' டிவிஷன் போட்டிகள் வரும் 12-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை பேசின் பிரிட்ஜில் உள்ள டான் போஸ்கோ இளைஞர் மையத்தில் நடைபெறுகிறது. இதில் கருணாலயா, ஆக்ஸிலிம், நெக்ஸ்ட் ஜெனரேஷன், எஸ்பிஓஏ ஜூனியர் கல்லூரி, ஆல்பா, குளோபர் ஸ்போர்ட்ஸ், டே ஸ்டார் எஃப்சி ஆகிய அணிகள் பங்கேற்கின்றன.

## கடைசி சுற்றில் குகேஷ் வெற்றி



வார்சா: மே,10 போலந்தின் வர்சா நகரில் கிராண்ட் செஸ் டூரின் சூப்பர் ரேப்பிடு மற்றும் பிளிட்ஸ் போட்டி நடைபெற்று வருகிறது. 10 வீரர்கள் கலந்து கொண்டுள்ள இந்தத் தொடரில் ரேப்பிடு பிரிவின் கடைசி சுற்றில் உலக சாம்பியனான இந்தியாவின் டி.குகேஷ், அமெரிக்க கிராண்ட் மாஸ்டரான ஃபேபியானோ கருணாவுடன் மோதினார்.இதில் 49-வது நகர்த்தலின் போது குகேஷ் வெற்றி பெற்றார். இதன் மூலம் அவர், 9 புள்ளிகளுடன் 4-வது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார். ரேப்பிடு பிரிவு போட்டி முடிவடைந்துள்ள நிலையில் 18 சுற்றுகள் கொண்ட பிளிட்ஸ் பிரிவு போட்டி நடைபெற உள்ளது.

## "விராட் கோலி விக்கெட்டை விட அணியின் வெற்றியே முக்கியம்" - இளம் வேகப்புயல் பிரின்ஸ் யாதவ்



லக்னோ: ஐபிஎல் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பலம் வாய்ந்த ஆர்சிபி அணியை 9 ரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி. மழையால் பாதிக்கப்பட்ட இந்த ஆட்டம் 19 ஓவர்களை கொண்ட போட்டியாக நடத்தப்பட்டது.முதலில் பேட் செய்த லக்னோ அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 209 ரன்கள் குவித்தது. தொடக்க வீரரான மிட்செல் மார்ஷ் 56 பந்துகளில், 9 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகளுடன் 111 ரன்கள் விளாசினார். கேப்டன் ரிஷப் பந்த் 10 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 32 ரன்கள் சேர்த்தார். டக்வொர்த் லீவிஸ் விதிப்படி 213 ரன்கள் இலக்கை துரத்திய ஆர்சிபி அணியால் 19 ஓவர்களின் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 203 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. அதிகபட்சமாக கேப்டன் ரஜத் பட்டிதார் 31 பந்துகளில், 6 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 61 ரன்களும், டிம் டேவிட் 17 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 40 ரன்களும் சேர்த்தனர். முன்னதாக விராட் கோலி இரு பந்துகளை சந்தித்த நிலையில் ரன் ஏதும் எடுக்காமல் பிரின்ஸ் யாதவ் பந்தில் ஆஃப் ஸ்டெம்பு சிதற போல்டானார். இந்த பந்தை 140 கிலோ மீட்டர் வேகத்தில் பிரின்ஸ் யாதவ் வீசியிருந்தார். கடந்த ஏப்ரல்2023-ல் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் முதல் பந்திலேயே ஆட்டமிழந்ததற்கு பிறகு, ஐபிஎல் தொடரில் கோலி ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தது இதுவே முதல் முறையாகும். மற்றொரு தொடக்க வீரரான ஜேக்கப் பெத்தேல் 4 ரன்களில் ஷமி பந்தில் வெளியேறினார். தேவ்தத் படிக்கல் 34 ரன்களிலும், ஜிதேஷ் சர்மா ஒரு ரன்னிலும் பிரின்ஸ் யாதவ் பந்தில் நடையை கட்டினர். கிருணல் பாண்டியா, ரோமாரியா ஷெப்பர்டு ஆகியோர் களத்தில் இருந்த நிலையில் திக்வேஷ் ராதி வீசிய கடைசி ஓவரில் ஆர்சிபி அணியின் வெற்றிக்கு 20 ரன்கள் தேவையாக இருந்தது. ஆனால் ஆர்சிபி அணியால் 10 ரன்கள் மட்டுமே சேர்க்க முடிந்தது. கிருணல் பாண்டியா 16 பந்துகளில், 28 ரன்களும் ரோமாரியோ ஷெப்பர்டு 15 பந்துகளில் 23 ரன்களும் சேர்த்தனர்.லக்னோ அணி தரப்பில் பிரின்ஸ் யாதவ் 33 ரன்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்களை வீழ்த்தினார். ஷாபாஸ் அகமது 2 விக்கெட்களை கைப்பற்றினார். 9 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற லக்னோ அணி தொடர்ச்சியாக அடைந்த 6 தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. தற்போதைய வெற்றியின் மூலம் லக்னோ அணி 6 புள்ளிகளுடன் கடைசி இடத்தில் தொடர்கிறது. 10 ஆட்டங்களில் விளையாடி உள்ள அந்த அணி 3 வெற்றி, 7 தோல்விகளை பதிவு செய்துள்ளது.போட்டிக்கு பின்னர் லக்னோ அணியின் வேகப்பந்து வீச்சாளரான பிரின்ஸ் யாதவ் கூறியதாவது: விராட் கோலியின் விக்கெட்டை வீழ்த்தியது சிறப்பான உணர்வை கொடுத்தது. ஆனால் நாங்கள் போட்டியில் வெற்றி பெற்றதுதான் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. விராட் கோலி விக்கெட்டை வீழ்த்திய போதிலும் நாங்கள் தோல்வி அடைந்திருந்தால் அது மகிழ்ச்சியை கொடுத்திருக்காது. எந்த விதமாக இருந்தாலும் சரி, பந்துவீச்சாளர் விக்கெட்டை வீழ்த்தும்போது அது நல்ல உணர்வைத் தரும். அந்த விக்கெட்டை எடுத்தால் மட்டுமே எங்களால் போட்டியில் வெற்றி பெற முடியும் என்ற சூழல் இருந்தது; அது நிகழ்ந்ததில் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். புதிய பந்தில் எப்படி பந்துவீச வேண்டும் என்பது குறித்து முகமது ஷமியிடம் இருந்து நிறைய கற்றுக்கொண்டேன். அவரிடம் இருக்கும் மிகச்சிறந்த விஷயம் என்னவென்றால், ஒரு பந்துவீச்சாளர் பந்துவீசும்போது அவர் மிட்-ஆன் அல்லது மிட்-ஆஃப் திசையில் நிற்பார். அனுபவம் வாய்ந்த வீரர் உங்களுக்கு அருகில் நிற்கும்போது, அது நம்பிக்கையை கொடுக்கும். கிரிக்கெட்டில் வெற்றி தோல்விகள் சகஜம். ஆனால் எங்கள் அணி எங்களது சிறந்த உழைப்பைக் கொடுத்து வருகிறது. நாங்கள் பிளே-ஆஃப் சுற்று குறித்து அதிகம் யோசிக்காமல், ஒவ்வொரு போட்டியையும் தனித்தனியாக அணுகி விளையாடுவதைப் பற்றி மட்டுமே சிந்தித்து வருகிறோம். இவ்வாறு பிரின்ஸ் யாதவ் கூறினார். 24 வயதான பிரின்ஸ் யாதவ் நடப்பு ஐபிஎல் தொடரில் 16 விக்கெட்களை கைப்பற்றி அதிக விக்கெட்கள் வீழ்த்தி உள்ளவர்களின் பட்டியலில் 3-வது இடத்தில் உள்ளார். இந்த வகையில் புவனேஷ்வர் குமார் (ஆர்சிபி), அன்ஷுல் கம்போஜ் (சிஎஸ்கே) ஆகியோர் தலா 17 விக்கெட்களை வீழ்த்தி முதல் 2 இடங்களில் உள்ளனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor:S.V.KANI RAJA. CALL: 044-22772060,9443699066